**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 75** **நாள்: 30.06.2017**

## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரி சட்டம் 2017 என்ற புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தமிழக அரசு, 1939ம் ஆண்டின் தமிழ்நாடு கேளிக்கைகள் வரி சட்டத்தினை நீக்கம் செய்து **"தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரி சட்டம் 2017"** என்ற புதிய சட்டத்தினை இயற்றியுள்ளது. இந்த புதிய சட்டம் 01.07.2017 முதல் நடைமுறைக்கு வருகிறது.

2017ம் ஆண்டின் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரி சட்டம் பிரிவு 3(1)ல் குறிப்பிட்டுள்ள அனைத்து கேளிக்கை நிறுவனங்களும் (இனம் (g) தவிர) பெருநகர சென்னை மாநகராட்சியில் தங்கள் நிறுவனங்களை பதிவு செய்து கொண்டு, 01.07.2017 முதல் கேளிக்கை வரியினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, 1939ம் ஆண்டின் தமிழ்நாடு கேளிக்கைகள் வரி சட்டத்தின்படி 30.06.2017 வரையிலான கேளிக்கை வரியினை வணிகவரி துறைக்கு செலுத்த வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

2017–ம் ஆண்டின் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரி சட்டத்தின்படி 01.07.2017 முதல் 03.07.2017 வரையிலான திரைப்படத்திற்கான கேளிக்கை வரியினை 04.07.2017 அன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

04.07.2017 (செவ்வாய்கிழமை) முதல் அடுத்த 10.07.2017 (திங்கட்கிழமை) வரையிலான திரைப்படத்திற்கான கேளிக்கை வரியினை செவ்வாய்கிழமை (11.07.2017) அன்று செலுத்த வேண்டும் என்றும் இப்புதிய சட்டத்தின் கீழ் திரைப்படத்திற்கான கேளிக்கை வரியினை பிரதிவாரம் செவ்வாய்கிழமை அன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**